தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண் 243447590

**ஆணை நாள் 12.11.2020**

**முன்னிலை**

**திரு ரா. ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-163/SCIC/2020**

திரு வே.ஜான்றோஸ் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
தலைமையிடம்,
கன்னியாகுமரி மாவட்டம்,
(இ) நாகர்கோவில் -- பொது அதிகார அமைப்பு

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 03.10.2019 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில், 29.06.2019 அன்று இரவு 8.55 மணிக்கு தனது வீட்டில் தக்கலை காவல் நிலையத்திலிருந்து இரண்டு காவலர்கள் நுழைந்துள்ளது சம்மந்தமாக 5 இனங்களில் தகவல்கள் கோரியுள்ளார். அதன்பின்னர், பிரிவு 19(1)-ன்கீழ் 11.11.2019-ல் முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். அதன்பின்னர் மனுதாரர், பிரிவு 19(3)-ன்கீழ் 31.12.2019-ல் தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார்.

2. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால், 13.10.2020 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை முழுமையாக வழங்குவதற்கு கடைசி வாய்ப்பு வழங்கும் வண்ணம் 22.10.2020-க்குள் வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டிருந்தது. மனுதாரருக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை என்றாலோ, முழுமையற்ற தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ அல்லது தவறான, குறைபாடான தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ, மனுதாரர் 02.11.2020-க்குள் ஆணையத்திற்கு கடிதம் மூலம் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

3. மேலே குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணையின்பால் மனுதாரரின் கவனம் ஈர்க்கப்படுகிறது. அந்த ஆணையில் மேற்கூறப்பட்ட வழக்கில் பொதுத் தகவல் அலுவலர் தகவல்களை வழங்க பணிக்கப்பட்டிருந்தார். அத்தகவல்களை ந.க.எண்.2805/கூகாக/தஅஉச/2019, நாள் 19.10.2020 என்ற கடிதத்தின் வாயிலாக வழங்கியதாக பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்துள்ளார். (இணைப்பு). அதன்பின்னர், பல நாட்களாகியும் வரப்பெற்ற தகவல்கள் சம்மந்தமாக மனுதாரரிடமிருந்து எந்தவொரு ஆட்சேபணையும் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் 12.11.2020 வரை பெறப்படாத காரணத்தால், மனுதாரரின் வழக்கு முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.

**ஒம்/- (ரா. ராஜகோபால்)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA-163/A/2020</u>**

<u>பெறுநர்</u>

<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
தலைமையிடம்,
கன்னியாகுமரி மாவட்டம்,
(இ) நாகர்கோவில்.

<u>மனுதாரர்</u>

திரு வே.ஜான்றோஸ்,
த/பெ.வேதமணி,
சாமிவிளை,
மேக்காமண்டபம் அஞ்சல்-629 166,
கன்னியாகுமரி மாவட்டம்.

PR/PS 20.11.2020

காவல் துறை

அனுப்புநர்

T. ஈஸ்வரன்,
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
தலைமையிடம்/பொது தகவல் அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்,
(இருப்பு) நாகர்கோவில்.

பெறுநர்

மாண்புமிகு தமிழ்நாடு மாநில தகவல் ஆணையர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
எண்.2, தியாகராய சாலை,
(ஆலையம்மன் கோவில் அருகில்),
தேனாம்பேட்டை, சென்னை.

05 NOV 20..
039859

ந.க.எண். 2805/கூகாக/தஅஉச/19, நாள்: 17 10.2020.

அய்யா,

பொருள்: காவல் - கன்னியாகுமரி மாவட்டம் - தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 – கன்னியாகுமரி மாவட்டம், மேக்காமண்டபம் அஞ்சல், சாமிவிளையை சேர்ந்த திரு. வி.ஜாண்ரோஸ் என்பவரது 2வது மேல் முறையீடு – அறிக்கை சமர்பித்தல் - தொடர்பாக.

பார்வை: மாண்புமிகு தமிழ்நாடு தகவல் ஆணைய வழக்கு எண். SA – 00163/A/2020, நாள் 13.10.2020.
2. S.முருகன், த/பெ. செல்வம், சாமிவிளை, மேக்காமண்டபம் அஞ்சல் என்பவரது பிரிவு 6(1)ன் கீழான மனு நாள் 03.07.2019.
4.இவ்வலுவலக கடித குறிப்பு ந.க.எண். 1585/கூகாக/தஅஉச/19, நாள் 12.08.2019.
5. திரு. வி.ஜாண்ரோஸ், த/பெ. வேதமணி, சாமிவிளை, மேக்காமண்டபம் அஞ்சல் என்பவரது பிரிவு 6(1)ன் கீழான மனு நாள் 03.10.2019.
4. இவ்வலுவலக கடித குறிப்பு இதே எண், நாள் 19.10.2019.
5. திரு. வி.ஜாண்ரோஸ், த/பெ. வேதமணி, என்பவரது முதல் மேல்முறையீடு, நாள் 11.11.2019.
6. முதல் மேல்முறையீட்டு அதிகாரியான காவல் கண்காணிப்பாளரின் மேல்வரைவு ந.க.எண். ஜி1/45966/19, நாள் 16.12.19.

****

பார்வை ஒன்றில் கண்ட மாண்புமிகு தமிழ்நாடு தகவல் ஆணையத்தால் வழங்கப்பட்ட உத்தரவிற்கிணங்க திரு. வி.ஜாண்ரோஸ் என்பவரது தகவல் அறியும் உரிமை சட்டம் 2005ன் கீழான 2-வது மேல்முறையீட்டிற்கான விளக்கம் மாண்புமிகு தமிழக ஆணையம் முன்பாக பின்வருமாறு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

2. கடந்த 03.07.2019 தேதியிட்டு மேக்காமண்டபம் அஞ்சல் சாமிவிளையை சேர்ந்த செல்வம் மகனான செ. முருகன் என்பவர் அவரது வீட்டில் கடந்த 29.06.2019-ம் தேதி இரவு ஒன்பது மணியளவில் தக்கலை காவல் நிலையத்திலிருந்து இரு காவல் ஆளினர்கள் அத்துமீறி நுழைந்து அவரை மிரட்டி சில ஆவணங்களில் கையொப்பம் பெற்றதாக குறிப்பிட்டு காவல் ஆளினர்களின் புகைப்படத்தை இணைத்து கையொப்பம் பெற்ற ஆவணங்களின் நகல்களையும், புகைப்படத்தில் உள்ள காவல் ஆளினர்களின் பெயர் விபரங்களோடு இரவு நேரங்களில் காவல் ஆளினர்கள் வீடுகளில் நுழையலாம் என விதிகள் இருப்பின் அதன் நகலினை சார்பு செய்யுமாறு 5 இனங்களில் தகவல்கள் கோரியிருந்தார் (நகல் இணைக்கப்பட்டுள்ளது). அவரால் கோரப்பட்ட தகவல்களுக்கு 29.06.19-ம் தேதி காவல் துறையினர் அத்துமீறி நுழையவில்லை எனவும், தக்கலை காவல் நிலைய குற்ற எண். 74/19

வழக்கு MF ஆக குறைவு செய்யப்பட்டதால் அதன் RC நோட்டீசை சார்பு செய்து கையொப்பம் பெற்றதாகவும், ஆவணத்தின் நகல் அன்றைய தினமே மனுதாரருக்கு சார்பு செய்யப்பட்டதாகவும், காவல் அலுவல் மேற்கொண்ட காவல் ஆளினர்களின் பெயர்கள் அவர்களது தனிப்பட்ட தகவல் என்பதால் பிரிவு 8(1)(j)ன்படி தகவல் மறுக்கப்பட்டதோடு இனம் 5-ல் கோரப்பட்ட தகவல் பிரிவு 2(f)ன்படி தகவல் ஆகாது எனவும் தகவல்கள் முறையாக சார்பு செய்யப்பட்டது.

3. இந்நிலையில் முருகன் என்பவரது அதே முகவரியிட்டு வேதமணி மகனான மேல்முறையீட்டாளர் திரு. வே.ஜாண்றோஸ் என்பவர் முருகன் என்பவரால் இணைக்கப்பட்ட புகைப்படங்களை இணைத்து அப்புகைப்படத்தில் உள்ளவர்களின் பெயர் விபரங்கள், அவர்கள் அவரது வீட்டில் நுழைந்ததற்கான விபரம், அவர்கள் தக்கலை காவல் நிலையத்திலிருந்து புறப்படுவதற்கு முன்னர் Movement Register-ல் பதிவு செய்த பதிவு, அவரது வீட்டிற்கு அனுப்பிய அதிகாரியின் பெயர், முகவரி மற்றும் இரவு நேரங்களில் வீட்டில் புகுந்து மிரட்டுவதற்கு விதிகள் இருப்பின் அதன் நகல்கள் ஆகிய தகவல்களை சார்பு செய்யுமாறு கோரியிருந்தார் (நகல் இணைக்கப்பட்டுள்ளது).

4. ஒரே முகவரியில் உள்ள இருவேறு நபர்கள் ஒரே வீட்டினை சொந்தம் கொண்டாடி தகவல்களை கோருவது தகவல் அறியும் உரிமை சட்டம் பிரிவு 7(9)ன்படி பொது அதிகார அமைப்பின் வள ஆதாரங்களை உரிய விகிதத்தில் அல்லாமல் திசை திருப்பும் விதமாகவே உள்ளது எனவும், ஏற்கனவே உரிய தகவல்கள் திரு. S.முருகன் என்பவருக்கு சார்பு செய்யப்பட்டதால் மனு முடிக்கப்பட்டது.

5. இதனை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட முதல் மேல்முறையீட்டினை மேல்முறையீட்டு அதிகாரியால் நிராகரிக்கப்பட்டதால் வே.ஜாண்றோஸ் இரண்டாம் மேல்முறையீடு சமர்பித்துள்ளார். தற்போது மாண்புமிகு ஆணைய உத்தரவின்படி மேல்முறையீட்டாளரால் கோரப்பட்ட தகவல் பின்வருமாறு சார்பு செய்யப்படுகிறது.

1. தக்கலை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ரத்தினராஜ் மற்றும் தலைமை காவலர் திரு. ஜெயராஜ்.

2. தங்களது வீட்டில் நுழைந்ததாக இல்லை மாறாக தங்களால் குறிப்படப்பட்ட முகவரியில் உள்ள செல்வம் மகனான செ. முருகன் என்பவருக்கு தக்கலை காவல் நிலைய குற்ற எண். 74/19 வழக்கு MF ஆக குறைவு செய்யப்பட்டதால் அதன் RC நோட்டீசை சார்பு செய்து கையொப்பம் பெறப்பட்டது.

3. காவல் நிலையத்திலிருந்து புறப்படுவதற்கு முன்னர் Movement Register என ஒரு பதிவேட்டில் பதிவு செய்வதில்லை.

4. தக்கலை காவல் நிலைய குற்ற எண். 74/19 வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் திரு. S.ரமேஷ் என்பவரது அறிவுறுத்தலின்படி செ. முருகன் என்பவரது வீட்டிற்கு சென்றனர்.

6. விதிகள் குறித்த ஆவணம் இல்லை என்பதால் கோரப்பட்ட தகவல் பிரிவு 2(f)ன்படி தகவல் ஆகாது.

தங்கள் உண்மையுள்ள,

இணைப்பு: மேற்கூறியவாறு.

19/10/20

கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
தலைமையிடம்/பொது தகவல் அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்.